# தமிழ்நாட்டை மறக்காதீர்...

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை..

முதல் பக்கத் தொடர்ச்சி

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் யயோய் காலத்தில் தமிழர்கள் ஜப்பான் நாட்டுக்கு வணிக நோக்கில் பயணம் செய்துவந்துள்ளார்கள். நெல்விதைப்பதற்கு முந்தைய சடங்குகளை தமிழர்கள்தான் இங்கு கொண்டு வந்து அறிமுகம் செய்தார்கள் என்று அவர் குறிப்பிடுகிறார். தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளுக்கும் ஜப்பானிய அறுவடை திருவிழாவுக்கும் ஒற்றுமை இருப்பதை இவர் எழுதி இருக்கிறார்.

தமிழறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் ஜப்பானுக்கு ஒருமுறை வந்திருந்தபோது டோக்கியோவுக்கும் ஒசாகாவுக்கும் இடையே இருக்கும் நகோயா என்ற நகரத்தை பார்த்துள்ளார். அங்கு இருந்த பெயர் பலகை ஒன்றில் இருந்த எழுத்து தமிழ் பிராமி எழுத்துருவின் சாயலில் இருந்துள்ளது. பிராமியில் எழுதப்பட்ட எழுத்தின் பொருளும், அதற்கான தமிழ்ச் சொல்லின் பொருளும் ஒரே மாதிரி இருப்பதை அவர் சொல்லி இருக்கிறார்.

யூகோ புகுரோய் என்ற ஜப்பானியப் பேராசிரியரும், இரண்டு தமிழ்ப் பேராசிரியர்களும் இணைந்து தமிழ்மொழி மூலம் ஜப்பானிய மொழி கற்க நூல்களை எழுதியுள்ளார்கள். நொபுரு கரோஷிமா அவர்களை ஜப்பான் அறிந்ததை விட தமிழ்நாடு அதிகமாக அறிந்து வைத்திருக்கிறது. உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் தலைவராக இருந்தவர் அவர். சீனாவில் தமிழ்க் கல்வெட்டுகள் இருப்பதாகச் சொன்னவர் அவர்.

தமிழ்ப் பண்பாட்டை விளக்குவதற்காக ஜப்பானிய மொழியில் ஆவணப்படம் எடுத்தவர் அவர். இன்னொரு குறிப்பிடத்தக்க வரலாற்று அறிஞர் பேராசிரியர்

ஷு ஹிக்கோசக்கா அவர்கள். இவர் சென்னைப் பல்கலைக்கழகத்தில்தான் தனது முனைவர் பட்ட ஆய்வை 'தமிழகத்தில் புத்த சமயத்தின் வளர்ச்சி' என்ற தலைப்பில் நிறைவு செய்தார்.

**ஜப்பான் மொழியில் சிலப்பதிகாரம் - மணிமேகலை!**

பின்னர் சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும் ஜப்பானிய மொழியில் மொழிபெயர்த்தார். பழந்தமிழர் வாழ்வை தமிழ் இலக்கியங்கள் சொல்வதைப் போலவே ஜப்பானிய பழைய இலக்கியங்கள் ஜப்பானிய மக்களின் பண்பாட்டை பறைசாற்றுபவையாக உள்ளன. தமிழ் இலக்கிய நூல்களை ஜப்பான் மொழியில் அதிகமாக மொழிபெயர்க்கக் காரணமாக இருந்தவர் என்ற அடிப்படையில் சேலம் ஓமலூரைச் சேர்ந்த சொ.மு.முத்து என்பவருக்கு 2007ஆம் ஆண்டு ஜப்பான் நாடு அஞ்சல் தலை வெளியிட்டுள்ளது.

**ஜப்பான் தமிழ்ச் சங்கத்தினரைப் பாராட்டுகிறேன்!**

இப்படி தமிழ்நாட்டுக்கும் ஜப்பானுக்குமான தொடர்பு மிக மிக அதிகம். இத்தகைய பெருமைகளைக் கொண்ட ஜப்பான் நாட்டில் உள்ள தமிழ்ச் சங்கங்களின் சார்பில் நடைபெறக்கூடிய இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். நம் அடுத்த தலைமுறையான குழந்தைகளுக்கு தமிழைப் படிக்க ஊக்குவிப்பது; ஜப்பானில் உள்ள பள்ளிகளில் தமிழ் நூலகங்கள் அமைக்க உதவி புரிவது; பள்ளிகளுக்கிடையேயான தமிழ் சார்ந்த கலைநிகழ்ச்சிகள் நடத்துவது; போட்டிகள் நடத்துவது; தமிழ் இலக்கியத்தை பரப்புவது; தமிழ்நாட்டிற்கு வெளியே வாழும், தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத தமிழர்களுக்குத் தமிழைக் கற்றுக்கொடுப்பது; தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிப்பது எனப் பல்வேறு ஆக்கப்பூர்வமான பணிகளைச் செய்து வரும் தமிழ்ச் சங்கத்தினரை நான் மனதார பாராட்டுகிறேன். தமிழைக் காப்பது தமிழினத்தைக் காப்பது ஆகும். அதைத் தொடர்ச்சியாகச் செய்யுங்கள்!

**அயலகத் தமிழர் நலனுக்கு தனித்துறை!**

அதற்குத் தேவையான உதவிகளை தமிழ்நாடு அரசும் திராவிட முன்னேற்றக் கழகமும் செய்யும் என உறுதி அளிக்கிறேன். படிப்பு வணிகம் வேலைவாய்ப்பு உள்ளிட்ட தேடல்களுக்காக பல்வேறு நாடுகளில் பரவி வாழும் தமிழர்கள் அனைவரையும் காக்க வேண்டிய பொறுப்பு தமிழ்நாடு அரசுக்கு இருக்கிறது. அந்தப் பொறுப்புணர்வுடன்தான் 2010ஆம் ஆண்டு, தமிழ்நாடு அரசு வெளிநாடுவாழ் தமிழர்களின் துயரங்களை களைந்திட வெளிநாடுவாழ் தமிழர் நலப்பிரிவு ஒன்றை மறுவாழ்வுத்துறையில் உருவாக்கி அரசாணை வெளியிட்டதுடன், வெளிநாடுவாழ் தமிழர்களின் நலம் பேணிட வாரியம் ஒன்று அமைத்திடவும் சட்டமுன்வடிவை உருவாக்கியது.

ஆனால் தொடர்ந்து வந்த அரசியல் மாற்றங்களின் காரணமாக இந்த முயற்சிகளில் சிறு தொய்வு ஏற்பட்டது. எனினும் தற்போதைய திராவிட முன்னேற்றக் கழக அரசு தனது தேர்தல் அறிக்கையில் சொன்னபடி, அயலகத் தமிழர் நலனுக்கென தனியே ஒரு துறையை உருவாக்கியுள்ளதுடன், அதற்கென தனி அமைச்சரும் நியமிக்கப்பட்டு, அயலகத் தமிழர்களின் உடனடி தேவைகள் உடனுக்குடன் சிறப்பான முறையில் தீர்த்து வைக்கப்பட்டு வருகிறது. அயலகத் தமிழர்களின் நலன் காத்திட தனி வாரியம் ஒன்று அமைக்கப்படும் என்று நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்து இருந்தார்கள். அதனையும் செயல்படுத்திக் காட்டி இருக்கிறோம்.

ஒரு தலைவர் மற்றும் 14 உறுப்பினர்களைக் கொண்ட அயலகத் தமிழர் நலவாரியத்தை அமைத்து ஆணையிடப்பட்டு உள்ளது. இந்த வாரியத்தின் மூலமாக, விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம் மற்றும் மருத்துவ காப்பீடு திட்டத்துக்கு அடையாள அட்டை வழங்க, அயலகத் தமிழர் குறித்த தரவு தளம் ஏற்படுத்துதல். வெளிநாடுகளில் புலம் பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு எனத் தனியாக சட்ட உதவி மையம் அமைப்பது உள்ளிட்ட அயலகத் தமிழர்களின் நலன் காக்கும் திட்டங்களைச் செயல்படுத்திட தமிழ்நாடு அரசு செயலாற்றி வருகிறது.

கடந்த இரண்டு ஆண்டுகளாக ஜனவரி 12ஆம் நாள் அயலகத் தமிழர் நாளாகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. "வேர்களைத் தேடி" என்ற திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் உலகெங்குமிருந்து 200 இளைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு அரசின் செலவில் இரண்டு வார கால பண்பாட்டுச் சுற்றுலா ஏற்பாடு செய்யப்படுகிறது. தமிழ் இணையவழிக் கல்வி பரப்புரைக் கழகத்தின் மூலம் 'கற்றலும் கற்பித்தலும்' என்ற அடிப்படையில் 53 மாணவர்கள் தமிழைப் பயின்று வருகின்றனர்.

இப்படி தமிழ்ப் பயிலும் இந்த இளந்தளிர்கள், ஜப்பான் நாட்டில் உள்ள நம் தமிழ்ச் சொந்தங்களிடையே - தமிழைக் கற்பது, கற்பிப்பதில் பெரும் எழுச்சியை உருவாக்குவார்கள் என்ற நம்பிக்கை இன்று இந்த விழாவின் மூலம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

அன்பு மிகுந்த உங்களது வரவேற்பை நான் எந்நாளும் மறக்க மாட்டேன். எங்கு வாழ்ந்தாலும் தாய்த்தமிழ் நாட்டை மறக்காதீர்கள். தமிழ்நாட்டுக்கு வாருங்கள்.

உங்கள் பார்வைக்காக கீழடி அருங்காட்சியகம் காத்திருக்கிறது. திருநெல்வேலியில் பொருநை அருங்காட்சியகம் அமைக்க அடிக்கல் நாட்டி இருக்கிறேன். கடந்த காலப் புகழோடு நிகழ்கால உழைப்பும் சேரட்டும். நிகழ்கால உழைப்பானது எதிர்கால சிறப்பை உருவாக்கித் தரட்டும் என்று சொல்லி, இந்த சிறப்பான வரவேற்பு நிகழ்ச்சியிலே உங்களோடு நானும் பங்கேற்று, இந்த இனிய வரவேற்பை தந்திருக்கக்கூடிய உங்களுக்கு எல்லாம் இந்த நேரத்திலே தமிழ்நாட்டினுடைய முதலமைச்சராக மட்டுமல்ல, என்றைக்கும் உங்களில் ஒருவனாக இருந்து, அந்த வகையில், என்றைக்கும் உங்களுக்கு நன்றி உள்ளவனாக இருப்பேன், உங்களுக்கு என்றைக்கும் துணை நிற்பேன் என்பதை இந்த நேரத்தில் எடுத்துச்சொல்லி, இந்த வரவேற்பு வழங்கிய அத்தனை பேருக்கும் மீண்டும் மீண்டும் எனது இதயபூர்வமான நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் மரு. கலாநிதி வீராசாமி, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், தமிழ்நாடு வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் வே.விஷ்ணு, ஜப்பான் நாட்டிற்கான இந்தியத் தூதர் சிபி ஜார்ஜ், ஜப்பான் தமிழ்ச் சங்கங்களின் நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தத் திட்டம் உள்ளது!

## சிங்கப்பூர் 'தமிழ் முரசு'க்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி....

முதல் பக்கத் தொடர்ச்சி

தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 30 சிங்கப்பூர் நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. அசெண்டாஸ் நிறுவனம், தரமணியில் ஒரு மிகப் பெரிய தொழில்நுட்பப் பூங்காவை நிறுவியுள்ளது.

தெமாசெக், டிபிஎஸ் வங்கி, மேப்பிள்ட்ரீ, சிங்கப்பூர் ஏர்லைன்ஸ் போன்ற பல நிறுவனங்கள் தமிழ்நாட்டில் தொழில் செய்து வருகின்றன.

"கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் ரூ.4,800 கோடி (S$785 மில்லியன்) முதலீட்டில் நான்கு சிங்கப்பூர் நிறுவனங்கள் தமிழ்நாட்டு அரசுடன் ஒப்பந்தம் செய்துள்ளன. இதன்மூலம் 6,200 பேருக்கு வேலை வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது. இன்னும் பல திட்டங்களுக்கு நிறுவனங்களுடன் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்று வருகின்றன.

"மின்னணுவியல், வாகன உதிரி பாகங்கள், தடையற்ற வணிக, பொருளியல் மண்டலங்கள், தகவல் தொழில்நுட்பம், உணவுப் பதப்படுத்துதல், மருந்து, ஆடை போன்ற பல்வேறு துறைகளில் அந்நிறுவனங்கள் முதலீடு செய்ய முன்வந்துள்ளன. மின்வாகனங்களுக்கான மின்னூட்ட நிலையங்கள் போன்ற புதிய துறைகளிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

**சீரான வளர்ச்சிக்கு பரவலாக திட்டங்கள்!**

"தமிழ்நாட்டின் சீரான வளர்ச்சியை உறுதிசெய்யும் வகையில், பல்வேறு மாவட்டங்களிலும் இந்தத் திட்டங்கள் பரவலாக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

"எனவே, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்குச் சிங்கப்பூர் பெரும் பங்காற்றி வருகிறது. இன்னும் கூடுதலாகப் பங்காற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காகவே நான் இங்கு வந்துள்ளேன்.

"புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி உள்ளன. 2024 ஜனவரியில் உலக முதலீட்டாளர் மாநாடு சென்னையில் நடைபெறவுள்ளது. அதில் பங்கேற்கும்படி சிங்கப்பூர் நிறுவனங்களுக்கு அழைப்பு விடுக்கவும் வந்துள்ளேன்.

**உலகத் தமிழருக்கு ஆதரவு!**

முன்னாள் முதல்வர் கலைஞர் கலைஞர் தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாது உலகெங்கும் பரவியுள்ள தமிழ்ச் சமூகத்தின் தலைவராகவும் விளங்கினார். அதே வழியை நானும் பின் பற்றுகிறேன்.

உலகில் எங்கு தமிழர்களுக்கு எந்த பாதிப்பு ஏற்பட்டாலும் உடனடியாக அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்.

அண்மையில் இலங்கையில் பொருளியல் நெருக்கடி ஏற்பட்டபோது தமிழ்நாடு கைகொடுத்ததை யாரும் மறந்திருக்க மாட்டார்கள். அந்த நாட்டுக்கு அரிசி, பால் மாவு, மருந்துப் பொருள்கள் உள்ளிட்டவற்றை அனுப்பி வைத்தோம்.

மேலும், தமிழ்நாட்டில் முகாம்களில் வாழும் இலங்கைத் தமிழ் மக்களுக்குச் சிறப்பான வாழ்வியல் சூழலை ஏற்படுத்தித் தரும் நோக்குடன் ஏறத்தாழ 500 கோடி ரூபாய் செலவில் 7,400 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும், அவர்களுக்கு வேலைவாய்ப்புகளைப் பெருக்கத் திறன்பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன.

உக்ரைன் நாட்டில் போர் நடந்ததன் காரணமாக, தமிழ்நாட்டில் இருந்து அங்கு மருத்துவம் படிக்கச் சென்ற மாணவர்கள் பாதிக்கப்பட்டார்கள்.

உடனடியாக பத்திரமாக அவர்களைத் தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்து அவர்கள் வீடுவரை கொண்டு சேர்த்தோம்," என்று முதல்வர் ஸ்டாலின் அவர்கள் நினைவுகூர்ந்தார்.

**வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியம் - இணைப்புப் பாலம்!**

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் வெளிநாடுவாழ் தமிழர் நலச்சட்டம் 2011ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் நாள் அப்போதைய தி.மு.க. அரசால் இயற்றப்பட்டது.

அவ்வகையில், தேர்தலில் வென்று தி.மு.க. மீண்டும் அரியணை ஏறியதும் 'வெளிநாடுவாழ் தமிழர் நல வாரியம்' அமைக்கப்பட்டது.

அவ்வாரியத்தின்மூலம் ஏராளமான பணிகள் நடைபெற்று வருவதாகக் குறிப்பிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "உலகம் முழுவதும் பரவி வாழ்ந்து வரும் தமிழர்களுக்கு தாய்வீடு என்பது தமிழ்நாடுதான்," என்றார்.

"உலகம் முழுக்க வாழும் தமிழர்களை ஒரு குடையின்கீழ் கொண்டு வரும் அமைப்பாக அவ்வாரியம் அமைய வேண்டும் என்று திட்டமிட்டுச் செயல்படுத்துவோம். தாய்த்தமிழ்நாட்டையும் அயலகத் தமிழர்களையும் இணைக்கும் ஒரு பாலமாக, அவ்வாரியம் செயல்படும். தமிழ்மொழி, தமிழிசை, நாட்டியம், பண்பாடு ஆகியவற்றை அடுத்த தலைமுறைத் தமிழர்களுக்குக் கொண்டு செல்லும் பணியையும் அந்த வாரியம் செய்யும்," என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்தார்.

**சவாலான காலகட்டம்!**

பதவியேற்ற இரண்டு ஆண்டுகளில் தி.மு.க. அரசு என்னென்ன சவால்களைக் கடந்து வந்துள்ளது, இனி எத்தகைய சவால்களை எதிர்நோக்குகிறது என்பது பற்றியும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விரிவாகக் கூறினார்.

"உண்மையில் இது சவாலான காலம்தான். பூக்கள் நிறைந்த அழகிய சாலையில் நான் பயணம் செய்யவில்லை. முற்றிலும் பாழ்படுத்தப்பட்ட சாலையில் குண்டும் குழியும் மேடும் பள்ளமும் கல்லும் முள்ளும் ஆணியும் கொண்ட சாலையில் பயணம் செய்வதைப் போலத்தான் முதல் சில மாதங்கள் இருந்தன.

"தமிழ்நாடு அரசுக்கு 500,000 கோடி ரூபாய் கடன் என்றதொரு கடினமான சூழலில்தான் முதல்வராக நான் பதவியேற்றேன். அந்த நேரத்தில் கொரோனா இரண்டாவது அலை பெரும் அச்சுறுத்தலை உருவாக்கியிருக்கி இருந்தது. அப்பேரிடரிலிருந்து மக்களைக் காப்பதே முதல் கடமையாக இருந்தது.

"அதனைச் சரியாக நிறைவேற்றி, அதன் பிறகு தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லும் சவாலான பணியை மேற்கொள்ளத் தொடங்கினோம். நிதி நிலைமை ஓரளவு சரிசெய்யப்பட்டுள்ளது. வருவாய்ப் பற்றாக்குறை யைக் குறைத்திருக்கிறோம். உற்பத்தி பெருகி உள்ளது. புதிய நிறுவனங்கள் வந்துள்ளன. வேலை வாய்ப்புகள் கிடைத்துள்ளன. இருப்பினும், நாங்கள் போக வேண்டிய தூரம் இன்னமும் இருக்கிறது.

"என்னைப் பொறுத்தவரை, இவற்றையெல்லாம் சவால்களாக நினைக்கவில்லை. பொதுவாழ்க்கையில், அரசு நிர்வாகத்தில் இவற்றை எதிர்கொண்டுதான் ஆக வேண்டும்.

"எதிர்மறையாகப் பேசி காரணங்களைத் தேடுவதைவிட, நேர்மறையாகச் சிந்தித்து சாதனைகளைச் செய்வதையே நான் விரும்புகிறேன். அப்படித்தான் செயல்பட்டு வருகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறினார்.

**தமிழர் நலனே முக்கியம்!**

'தமிழ்நாட்டில் இப்போது வடஇந்தியர்கள் பெருகிவிட்டனர். சிறுநகரங்களிலும்கூட அவர்களை அதிகம் காண முடிகிறது. அவர்கள் இல்லையேல் தொழிற்சாலைகள் முடங்கிப் போகும்' என்ற நிலை இருப்பதாக தமிழ்நாடு வட்டாரங்கள் கூறுகின்றன.

இதனையடுத்து, வடஇந்தியர்களின் வருகை அதிகரிப்பால் தமிழ்நாட்டிற்கு நன்மையா தீமையா என்று 'தமிழ் முரசு' கேட்டது.

அதற்கு, "தமிழ்நாடு வளர்ந்த, வளமிக்க மாநிலமாக இருப்பதால் வடமாநிலத் தொழிலாளர்கள் வேலைக்காகத் தமிழ்நாட்டிற்கு வருகிறார்கள்,

அவ்வளவுதான்! இது தமிழ்நாட்டுக்கு நன்மையே தவிர தீமையன்று. அதற்காக மற்றவர்களது வேலை வாய்ப்பை அவர்கள் பறித்துக்கொள்கிறார்கள் என்று சொல்ல முடியாது.

"எங்களைப் பொறுத்தவரை, தமிழர் நலனும் தமிழ்நாட்டின் மேன்மையுமே முக்கியம். அதில் நாங்கள் எப்போதும் உறுதியாக இருப்போம். தமிழ் கட்டாயம், வேலைவாய்ப்பில் தமிழர்களுக்கு முன்னுரிமை போன்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறோம்," என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிலளித்தார்.

**சொத்து வரி உயர்வு!**

தமிழ்நாட்டில் சொத்து வரி உயர்த்தப்பட்டுள்ளது குறித்துச் சிங்கப்பூரில் வாழும் தமிழ்நாட்டுத் தமிழர்களில் சிலர் கவலை தெரிவித்து இருப்பது குறித்தும் முதல்வரிடம் கேட்கப்பட்டது. அதற்கு, இந்திய அரசின் 15வது நிதி ஆணையம் அறிவித்த வழிகாட்டுதலின்படி தமிழ்நாட்டில் சொத்து வரி விகிதம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.

"மாநில அரசின் உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சிக்கு ஏற்றவாறு ஆண்டுதோறும் சொத்துவரி விகிதத்தை மாற்றி அமைத்திட வேண்டும் என்று ஒன்றிய அரசால் அமைக்கப்பட்ட 15வது நிதி ஆணையம் அறிவுறுத்தியுள்ளது," என்று அவர் சொன்னார்.

தமிழ்நாட்டில் சொத்து வரியானது, இந்தியாவின் மற்ற பெருநகரங்களோடு

ஒப்பிடும்போது, மிகவும் குறைவாகவே வசூலிக்கப்படுகிறது என்றும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார். மும்பை, பெங்களூரு, கொல்கத்தா, புனே ஆகிய நகரங்களைக் காட்டிலும் சென்னையில் சொத்து வரி குறைவு என்பதையும் அவர் சுட்டிக்காட்டி னார்.

அண்மையில் அறிவிக்கப்பட்ட சொத்துவரி உயர்வு என்பது 83 விழுக்காடு வீடுகளுக்கு மிகக் குறைவான அளவில்தான் உயர்த்தப்பட்டுள்ளது என்று புள்ளிவிவரங்கள் சொல்வதாகவும் அவர் தெரிவித்தார்.

**கொள்கை உரமும் தொண்டர் படையும்!**

அ.தி.மு.க. பிளவுபட்டுக் கிடப்பது தி.மு.க. விற்குச் சாதகமா எனக் கேட்டதற்கு, "அ.தி.மு.க. இப்போது நான்கு அணிகளாகப் பிரிந்து கிடக்கிறது. அது பற்றி எங்களுக்குக் கவலையில்லை. அவர்களது பலவீனத்தை நாங்கள் அரசியல் செய்வதில்லை. எங்களது கொள்கைகளையும் தொண்டர் பலத்தையும் நம்பியே எப்போதும் இருப்போம்," என்று அவர் தெரிவித்தார்.

அத்துடன், கலைஞர் காலத்தில் நிகழ்ந்ததைப்போல, பா.ஜ.க.வுடன் தி.மு.க. கூட்டு சேர வாய்ப்பில்லை என்ற அவர், வாஜ்பாய் தலைமையிலான அன்றைய பா.ஜ.க.விற்கும் இன்றைய பா.ஜ..கவிற்கும் நிறைய வேறுபாடு உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

மேலும், அமைச்சராக தம் மகன் உதயநிதியின் செயல்பாடு பெருமைப்படத்தக்க வகையில் இருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நெகிழ்ச்சியுடன் கூறினார்.

**'தமிழ் முரசு' யோசனைக்கு முதல்வர் வரவேற்பு!**

'உலகெங்கிலும் உள்ள தமிழ்ப் படைப்பாளிகளை அங்கீகரித்து சிறப்பிக்கும் வகையில் தமிழ்நாடு அரசு விருதுகள் வழங்க வாய்ப்பு இருக்கிறதா" என்று

கேட்டதற்கு, "நல்ல யோசனை. உறுதியாகச் செய்யலாம்," என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறியிருக்கிறார்.

அத்துடன், முன்னைய தி.மு.க. ஆட்சியில் உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தியதுபோல, இம்முறையும் அதற்கான திட்டம் உண்டு என்றும் அதற்கான சூழல் அமையும்போது உரிய அறிவிப்பு வெளியாகும் என்றும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.